# ஆதி மார்க்க னீதி மொழி

March 2024

இதழ் 32 – மார்ச் மாதம் 2024 வெளியீடு

© AMNA Trust, Chennai



### மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் நோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, மெய் மணத்துடன் மாறா மணம் கமழும் ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகை 32 ஆவது இதழாக மலர்ந்து மணம் கமழ்கிறது.

ஜீவனான சிவசைதன்யப் பொருளை அடினாதமாக சாட்சி வைத்து போதிக்கும் செயலுடன் திகழ்வதே ஆதி மார்க்க னீதி அவை. இரண்டு இசை வகுப்பு நிகழ்வுடன் 14 அவை நிகழ்வுகளாக மெய் மணம் பொதிந்து மலர்ந்துள்ளதே இந்த பிப்ரவரி மாத இதழ். கற்பகத் தருவின் மெய்மணம் கமழும் தேவ வசந்தத்தை அறிந்து அறிவுத் தெளிவு பெற்ற மக்கள் தாங்கள் அனுபவித்த பேரின்ப நிலைகள் யாவற்றையும் வேத சாட்சியாக பகிர்ந்ததன் இரத்தினச் சுருக்கமே இம் மின்னணு சஞ்ஞிகையின் ஒவ்வொரு இதழ்களும். இம் மேன்மையான அனுபவங்களை பெற்றும், பெற்றுக் கொண்டும், பெறவும் உள்ள மக்களே, முறையான வணக்கம், மாசற்ற இரக்கம், வருங்கால தீர்க்கம் என பரிசுத்த ஆவித் தெய்வம் பரம் பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள மந்திர ஸ்திரத்தை கை கொண்டு திளைக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

இம் மின்னணு சஞ்சிகையை பார்த்து படிக்கும் எதார்த்த நன்மன மக்கள் யாவரும் படிப்பதுடன் நின்று விடாமல் இதற்குரிய செயல் எங்கே எனத் தேடி மெய்ப்பொருளை அடைந்து பேரின்ப பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற ஆசீர்பாதத்துடன் உலகம் உய்ய இம் மின்னணு சஞ்சிகையைச் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி. நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*பிறவிப் பிணியை னீக்க யாராலும் முடியாது. அதைப் போக்க, மெய் என்னப்பெற்ற அழியா அருமருந்நை அளிக்கின்ற ஒரு ஜீவ பண்டிதர் னமக்கு வேண்டும். அப்பேர்க்கொத்த ஜீவ பண்டிதர்கள் இவ்வுலகிற்குக் காலகாலம் தேவனாட்டிலிருந்நு இறங்ஙி வந்நு மக்களிடையில் னேரே பேசினார்கள்; கூவி அழைத்தார்கள். அப்பொழுது அவர்களைத் தூஷித்துப் புறக்கணித்தார்கள். ஆனால் அவர்கள் போனபின் அவர்கள் பாடிவைத்துள்ள பாட்டுக்களைப் பாடுவது, பூஜிப்பது, கோவில் கட்டித் திருவிழா னடத்துவது வழக்கமாகி விட்டது; இதைப் பார்க்கும்போது புருஷன் உயிரோடிருக்கிற காலத்தில் அவனைப் புறக்கணித்துக் கொண்டித்தனமாக வாழ்ந்நுவிட்டு, அவன் இறந்நபின் அவனை னினைத்து ஆறுகால பூஜை செய்பவளைப் போலிருக்கிறது. கைலாசவாசரின் திருச்சன்னிதி அடைந்நு, அவரது கொலுவாசனத்தில் அமரவே, இத்தேகத்தின் அதிபதியாகிய ஸ்ரீமன் னாராயண மூர்த்தியின் திருச்சன்னிதி னிழல் போய்ச் சேரவே, னாம் இந்ந மானிடச் சட்டை எடுத்தோம். இதனை விட்டு ஒரு அட்வகேட் ஆக, பணக்காரர் ஆக, னாடாளும் மந்நிரியாக ஆவதற்கு இத் தேகம் எடுக்கவில்லை.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 பிப்ரவரி மாத அவை நிகழ்வுகள் – 2024 மார்ச் மாத வெளியீடு

**01-02-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**

நாளினுள் இருக்கும் வினை தீர்க்கும் வினை முதல்வனாகிய இறைவனிடம், நம் பிரச்சனைகளை தவிர்த்து, வினை தீரவும் பிறவாமை பெறவுமே வேண்டுதல் வேண்டும். மெய்ப்பொருள் காண்பதற்கான அறிவை அடிநாதமாகக் கொண்டதே **ஆதி மார்க்க னீதி அவை.** அவரவர் இதயத்துள் விளங்கும் நித்திய நன்மையை நமக்கு சொந்தமாக்கி வைப்பவர்களே ஞானிகள். அறியாமை சார்ந்த நம்பிக்கை கொண்டு நாம் இறைவனை வணங்கும் செயலை ஆதியாகமத்தில், ஜெபம் என்ற பெயரால் வீண் வார்த்தைகளைக் கொண்டு அலப்பாதிருங்கள் உங்களுக்கு இன்னது வேண்டுமென படைத்த இறைவனுக்கு தெரியும் என கூறப்பெற்றுள்ளது. கண் கண்ட தெய்வமாக விளங்கும் திசை காட்டும் சூரியனே இறை இல்லத்தின் இருப்பிடம் எனும் அகமிய ரகசியத்தை அறிவினை அறிந்தோரே அறிவர்.

**எமன்படர் அடிபடு திருமெய்ஞான கொரல் : திருவாக்கியம் எண் - 3** கண், காது, மூக்கு, வாய் இதனுள் அடங்கியுள்ள வேதம் பழகக்கூடிய ஒன்றாகவே உள்ளது. புலன்களின் தலைவனாகிய மனமும் அந்தகரணங்களும், அது கடந்த ஜீவனும், அது கடந்த மெய்ப்பொருளும் இறைவனின் ரகசிய பெட்டகமாகிய மனுத் தோற்றத்திற்கே உரித்தானது. மூலமந்திரம், பாதபூஜை, மகா சங்கல்ப மந்திரம் இவற்றை செயலாகக் கொண்ட ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் யாவரும், அரிய பிறப்பாகிய மனு எனும் பதத்தில் ஆகிக் கொண்டவர்கள்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குர்ஆன்:** அளவில்லா கருணையும் இணையில்லா கிருபையும் உள்ள அல்லாஹ் எனும் இறைவனை அடைவதே ஒவ்வொருவரின் கடமையாகும். அல்லாஹ் அவர்களின் திருத்தூதராக இணையற்ற கிருபையுடனும் கருணையுடனும் வரும் இறை நிலை பெற்ற குருபிரானின் நீதியை நிந்தனை செய்பவர்க்கு பாவமன்னிப்பு இன்றி நித்திய நரகமே கதி என்கிறது வேதம். தெய்வத் தாயாகிய ஆசானிடம் எடு குழந்தையைப் போல் இருப்பவரே இரட்சிக்கப் பெறுவர்.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 217:** மெய் மகத்துக்களை நிந்தனை செய்வோரின் இதயங்கள் மீதும் செவிப்புலன் மீதும் பார்வை மீதும் திரையிடப் பட்டுள்ளதாக அல்லாஹ் அருளிய ஒன்றையே, வாயினில் நாயும், நாசியில் வண்டும், மது செவிதனில் விஷப்பாம்பும், ஈயணைந்திடும் கண் இபுலீசன் வீடு என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஔவையாரும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என கூறியது, ஒரு மெய் குருபிரானின் திருவடி நிழல் படிந்து அறிவுத் தெளிவு பெற்று பிறவிச்சுழலில் இருந்து விடுபடும் அரும் பெரும் செயலாகும்.

திருக்குர்ஆனின் எச்சரிப்பு வசனங்களை கேட்டு நீதி வழியில் நடக்க விழையும் செயலையே ஆண்டவர்கள், **வஞ்சுப் புலன்சதிக்கும் மறலிசெய்யும் வாதனைக்கும் அஞ்சுதெனது னெஞ்சும் உமதடினிழலைத் தந்நருளும்** என அருளியுள்ளார்கள். மும்மலத்தால் மூடப்பட்டுள்ள ஜீவன் சிவனாகி, கூடிருக்க கைலாயம் காணும் மெய் வணக்கத்தை ஆசான் மூலம் பழகித்தேர வேண்டும். மெய்ச்செயலில் தொனியை அதிகமாகச் செலவு செய்து ஜீவன் முத்தன் என்ற பதத்திற்கு உரியவர்களாக நாம் வாழ வேண்டும் என குருபிரான் அருளிச் செய்ததும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**03-02-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்று வும்மை எண்ணி விட்டிருந்நேனின்னாள் ...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மனிதனுக்கு இறைவன் தந்த தனிச் சீதனமான ஆறாவது அறிவெனும் மாணிக்கத்தை ஆசான் அருளால் உணர்ந்து பிணி, மூப்பு, சாக்காடு அணுகாத அறிவு தேகத்தில் குடியேறி வாழ வேண்டும் என உணர்த்த வந்ததே பெரியோர்கள் அருளிய வேத மா மறைகள் யாவும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர்: 161** அனித்திய வாழ்வை பெரி தாக எண்ணும் சொந்த பந்தங்களிடம் வெளி அன்பும், ஆசான் அருளால் னித்திய வாழ்வில் குடியேறி வாழும் ஜீவபிறவியர்களிடம் உள் அன்பும் வைத்து வாழ வேண்டும் என்பதே ஆண்டவர்களின் திருவாக்கு.

*ஜீவசகோதரி பானுமதி:* **அல்குரான் - அத்தியாயம் 11 : ஹூத் நபியின் வரலாறு மற்றும் ஹூத் சமுதாயத்தின் தோற்றம் மற்றும் மறைவு:** அறிவு வடிவாக வரும் குருபெருமானின் வார்த்தையை அல்லத் தட்டுவோர்க்கு அல்லலாம் துன்பமே வந்து சேரும். அல் கிதாப் எனும் வேத மறையை சாலை ஆண்டவர்கள் தாலிக்கல் கிதாபு என அருளியதின் இரகசியமாவது, நான் எனும் உள்ளமை ரகசியத்தை உணர்த்தும் கிதாபு - ஏட்டினில் மட்டுமன்றி கூட்டினில் நிஜமாக்கும் நித்திய செயலுடையதாக அருளப்பெற்றுள்ளது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - மத்தேயு : அதிகாரம் - 21:33** வினை முதல்வனாம் இறைவன் மானிட ஜென்மத்திற்கு அளித்த அமானிதம் எனும் அறிவு பொக்கிஷம், அவன் திருத்தூதர்களின் துணையுடன் மீண்டும் தன்னை வந்து சேர்வதற்கே அளிக்கப்பெற்றுள்ளது. இதை அறியாமல் நரன் என்ற நிலையில் தன் கீழ்நோக்கமான செய்கையால், மீளவே முடியாத நரகத்தில் புகும் அவனை மனுவாக்கி, மேல்னோக்கமான மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கவே அவதார புருஷர்கள் வருகிறார்கள். அவர்களின் அமுத மொழிகள் எனும் திராட்சை கனிகள் விளையும் தோட்டமானது, ஆசானின் திராட்சை ரசமாகிய நாதத்தின் மூலம் மனிதனின் உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்தில் செழிப்பாக வளர்க்கப்பெறுகிறது.

**குருபிரான் அருளமுதம் - குருமுறாதி :**

**ஜலத்தினில் அக்கினி உருவாய் இருக்கும் இறைபொருளை** அறிவதற்கான அருமறையின் உளவானது, குருபெருமானின் பாத்திரமாய் உள்ள கோத்திரர்க்கே பகிரப்பெறுகிறது. பனிரெண்டு ஆண்டுகள் குருகுலவாசம் பயின்று, ராஜாங்க யோகத்தின் மூலம் மூன்றாவது கண் திறக்கப் பெற்ற சீடர்களுக்கே, ஆயிரத்தெட்டு அண்டம், ஜெகஜோதி, கவனமணி குளிகை, வாசிமுனை எனும் பரிபாஷை சொற்களின் உள்ளமை இரகசியம் பட்டப்பகல் போல் பளிச்சென மின்னுகிறது. திருமறைகளின் தேவ இரகசியம் அனைத்தும் திருவெனும் அட்சரத்துள் திரட்டி வைத்திருக்கும் தவநிலையும், அரன் புகு சுழி னாத வீடாகிய முச்சுடரின் இரகசியமும், அப்புப்பும் கலந்து கட்டிய இத்தேகத்தில் அறிய வைப்பவரே நவமணிப்பதி நாயகமாகிய குருபெருமான். அவர்களின் பெருங்கருணை பேரிரக்கமே பரத்திற்கான குடியாகிய பஞ்ஞலோகமெனும் பஞ்ஞாட்சர மேனியில் நம்மை பொருந்தி வாழ வைக்கிறது என்ற குருபிரானின் தெள்ளமுத வர்ஷிப்புடனும் பரிசுத்த ஆவித்தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## 04-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயிர் அறியா...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* தன்னுயிரை அறியாது தணியாத உலக இச்சையுடன் இருப்பதே தாகமாக இருக்கிறது. மெய்ஞானத்தை பெறாத தாவுகின்ற செயலுடைய மனமே அலைகிறது. ஜீவத்தண்ணீரான ஆசானின் அருளமுதமே அலைகின்ற மனதின் தாகம் தீர்த்து அறிவு னிலைக்கு ஏற்றி வைக்கும் வல்லபம் கொண்டது. யுகந்தோறும் பூமிக்கு வரும் தீர்க்கதரிசியரிடம் சரணடையும் போதே நம் அறியாமை அகல்கிறது. அவர்களின் அமுதம் சிந்தும் தமிழே நமது அகமியத்தில் விளங்கும் பிரகாசப் பொருளான தமிழை அறிய வைக்கிறது. நம் அறிவு சம்மதிக்க ஓர் வகை, மூவகை, ஐவகைப் பொறுப்பும் அவரவர் உள்ளத்துள் உரிமையுற மெய்ப்பயன் மெய்யாகச் செய்து னம் பிறவிப் பிணி தீர்க்கும் அவரே அறிவு வடிவான இறைவன். சர்வத்திலும் னின்றாடும் குஞ்ஞிதபாதத்தை, ஏழ்னிலைக் கம்பமாய் மூன்றுலகத்திலும் ஊடுருவி னிற்கும் திருப்பாதமாகிய னற்றாளை, குருபிரானின் இரக்கத்தால் னம் உள்ளத்தில் கண்டு, கற்கும் கல்வியே மெய்க்கல்வி.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* குருவின் துணையுடன் மனிதனுக்கென்றே தரப்பெற்றுள்ள தனிச் சீதனமாகிய அறிவெனும் அமானிதத்தை அறிந்து, இவ்வுடம்பெடுத்தல் எதற்கென எண்ணி தன்னை அறிந்து வாழ்வதே இன்னில வாழ்வாகும்.

*ஜீவசகோதரர் ஜெகன்னாதன்:* பெரியோர்கள் உண்டாக்கிய கோவில்களும் வேதங்களும் ஒவ்வொரு மனுத்தலையிலும் விளங்கும் அசலை அறிவதற்காக உண்டாக்கப் பெற்ற நகல் வடிவங்களே என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே னிறைவுற்றது.

> *குருவை னிந்நிப்பவனின் னாவைச் சேதிக்க சாமர்த்தியமில்லையாயின் அவன் வார்த்தை செவியில் விழாதபடி அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய் விட்டு, பிறகு வந்து வசித்தல்வேண்டும்; அல்லது அந்த இடத்தையே விட்டுவிடவேண்டும்.*
>
> ***~ குரு கீதை***

## 04-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

வள்ளல் பெருமான் அருளிய **இன்ப வடிவம் தருதற்கு இறைவர் வருகின்றார்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தது.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* குருபிரான் தன் சென்னியாகிய தலையில் திருவடி பதித்து ஜீவப்பிரகாசம் காட்டி, மூவுலகம் கடந்த மேலுலகில் குடியேற்றி, வினை தீர்த்து முத்தி என்னும் பிறவாமை அளித்ததையே **சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு...** என சென்னிப்பத்து பாடலில் மாணிக்கவாசகப் பிரான் அருளியுள்ளார்.

*ஜீவசகோதரி கனகத்தாய்:* குருவானவர்கள் நம் வயது வாழ்நாள் வீணாகும் விதம் காட்டி அதிலிருந்து நம்மை மீட்கிறார்கள். அவர்களின் அருளமுதக் கிரணம் நம் அறியாமை அகற்றி



Copyright © AMNA Trust, Chennai March 2024

பாதத்தின் மேன்மையை உணர்த்தி நற்றாளைக் காணச் செய்து ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலத்தில் ஆக்கி வைக்கிறது.

*ஜீவசகோதரர் சோலையப்பன்:* கண்டத்தில் இருக்கும் ஜீவன் அழிவதாகவும், சிரத்தில் இருக்கும் ஜீவன் அழியாததாகவும் உள்ளது. பெருந்துறை என்பது மெய்வழி என்றோர் மேடாக, தன்னை அறியும் தலமாக இருக்கிறது. குருபிரான் தன் சீர் பாதமாகிய திருவடியை நம் அஃகண்ணாகிய இருதயமெனும் சிரசில் பதியவைத்து நித்தியத்தில் ஆக்கும் போது இருவினைகள் அகன்று முத்தாபமும் தீர்கிறது.



*ஜீவசகோதரர் கார்த்திகேயன்:* நான்கு தேக ரகசியமும் கூர்ந்து சம்மதிக்கப் பேசும் குணம் உளோரும் காண இயலாத ஆதி நாயக தேவ தேவனை நாம் கண்டுணரச் செய்யும் வள்ளலே தேர்ந்த ஒரு மெய்க்குருபிரான். மனம் தளிர மரபில் வரும் மவுன குருவின் அருளால் உணர்வுடனும், நினைவுடனும் ஜோதியில் கலந்து விஷக் காற்றை அமுத காற்றாக்கி, மனதை அறிவாக மாற்றி, வாசி யோகத்தில் கவனமாகப் பழகி, அழிந்திடாச் சூக்குமத்துள் அடங்ஙிட பிறவாமை பெறலாம்.

*ஜீவசகோதரி சித்ரா:* அகரம், முதல், அவ்வெழுத்து, ஆதிபகவன், இதனை தன்னில் அறியும் போதே நம் உடல் வாழும் இடமாகிய உலகை அறிய முடியும். அவன்-அவள்-அது எனும் மூன்றினுள் தான் முத்தொழில்களும் உள்ளன. ஆசான் அருளால் இன்னொரு தேசமாக விளங்கும் நம் அகமிய உலகத்தை அறிவதே உபதேசம். வள்ளுவர் கூறிய உலகும் அதன் உற்பனப் பொருளாகிய சிவமயப் பொருளும் அதனை இயக்கும் பிரபஞ்ச ஆற்றலாக மனிதனின் சுத்தத்துறை இருதயத்துள் விளங்கும் இறை சக்தியையும் அகர முதலாக வரும் ஆசான் துணை கொண்டே அறிய முடியும். அவரவருள் நடுப்பொருளாக நின்று விளங்கும் ஆறாவது அறிவை ஆசான் அருளால் அறிகையில் தன்னுலகம் விடிகிறது. கோலமாஞ் ஜீவகோலத்துள் இருந்த சாலை என்ற ஒரு மெய்மேனி ஜகந்நனில் வந்து பிறங்கிட தலையுகமான பிரம்ம உலகு உதயமாகி சாந்தி எனும் சலாமத் உண்டாகிறது.

*ஜீவசகோதரர் அஜய்கிருஷ்ணன்:* தொல்காப்பியர் அருளிய ஒன்று முதல் ஆறறிவு வரை புறத்தில் ஜீவ பேதங்களாகவும், அகமியத்தில் மனிதனிடம் மெய்உணர்வாக, நடுக்கருவாக, உயிர்ப்பிக்கும் பொருளாக, பார்ப்பானாக, ஆகாய தத்துவமாக, இறைவன் தந்த தனிச் சீதனமாகிய மனமாகவும் அதுவே அறிவாக, ஜீவனாக, அகாரமாக விளங்கும் சிறப்பை திருவள்ளுவர் **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற** என அருளியுள்ளார்.

*ஜீவசகோதரர் சுந்தர்:* சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆதியை அறிய குருவே துணை** என்ற அறிவு அறி பாடத்தின் வரிகள் செயலாக நம் வாழ்வில் நிஜமாகும் இடம் ஆதி மார்க்க னீதி அவை. படிப்பதால் பலன் கிட்டாத வேதத்தை ஆசான் அருளால் பழகி வருவதே இம்மையில் அடக்கம் பெறுவதற்கான வழி. அறியாமைக்குள் இருக்கும் அறிவை அறிய வைத்த அறிவு வடிவாகிய ஆசான் தாள் போற்றி வணங்குவோம்.

*ஜீவசகோதரர் வஜ்ரவேல்:* பல காலம் மெய்வழித் தொடர்பில் இருந்தும் கிட்டாத மெய்யை மெய்யாகவே அறிய வைக்கும் தலம் ஆதி மார்க்க னீதி அவை. குருவின் தயவால் முக்கோணம் என்னும் கொழுமுனையின் மீது ஊணி அந்தர்முகமாக அகநோக்கு விரிந்து ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்ய குலத்தில் நாம் ஆகியிருக்கும் உன்னதத்தை, இதனை அறியாத மக்களின் பேச்சின் மூலமே அறிய முடிகிறது. பஞ்சமா பாதகத்திலிருந்து நம்மை மீட்டு சிவ நிலைக்கு ஏற்றுவிக்கும் குரு வா ஆழ்க.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் காளிதாஸ்:* ஒரு தலைமுறை காலம் நம்மில் குடியிருக்கும் ஜீவனை அறியாமல் இருப்பதுவே அறியாமையின் உச்சம். வித்தானது விளைந்து விருட்சமாவது போல், ஆறு பிறப்புவரை நம்மை வளர்த்து வரும் இறை சக்தியை அறிவதற்காக ஏழாவது பிறப்பில் நம்மை பிறக்க வைக்கும் குருபிரானின் கருணையே பெருங்கருணை. மானிடச் சட்டை தாங்கி தெய்வத்தாயாக வரும் குருபிரானே நம்மை ஜீவசிம்மாசன மேடையில் ஏற்றி நித்திய வாழ்வில் குடியேறச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் கௌதம்:* வரம்பிலா மெய்ஞானத்தை நம் தலையில் ஏற்ற வந்ததுவே வேதங்கள். அறிவு நிலைக்கு நம்மை ஏற்றி வைக்கும் குருவின் வாக்கே ஞானத்தை பெறுவதற்கான சுருக்கமான வழி. ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு மறலி கை தீண்டாமை எனும் மெய்ச்செயல் இன்று கை வரவாக உள்ளது. ஒரு மொழியின் நான் மறையாக விளங்கும் அங்கமதை தெளிய வைத்து, எட்டாப் பெருங்கடனாக இருக்கும் இறைவனின் செய்நன்றியை தீர்க்கும் குருவே, அருள் பாலிக்கும் சிவனாக ஜீவனாக அறிவாகத் திகழ்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

**சிற்ற றிவிற்**
**கற்றும்பய னற்றவர்க்குக் கற்பகத்த ருவெனவந்**
**நேவசந்நவா** **(ஆடலங் ஙன்னி)**

நான்முகனாகிய பிரம்மாவின் ரகசியமே நான்கு தேக ரகசியம். தலையான தலையாகிய சூக்குமமே அறிவுடன் சேர்ந்து பிரம்மமாக விளங்குகிறது. சதா காலமும் சூட்சும சரீரத்தில் சஞ்சரிப்பவர்களே பிரம்ம சொரூப வடிவான ஞானிகள். சர்வ வேதங்களையும் சாட்சி வைத்து தன்னை அறிந்தோர் பேசும் பேச்சின் பொருள் யாவும் ஒன்றே. அது அவரவரின் உயிராக நாமத்திற்குரிய பொருளாக உள்ளது. அதனை அறிய வைப்பது ஆசானிடமிருந்து வரும் அழியாத தௌஹீது எனும் பிரணவக் கலையே.

திருமண நாள் காணும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் சங்கர்-சுமதி தம்பதியர் மெய்ஞானத்திற்கு ஒரு துணைக் கருவியாக மக்களுக்கு கலங்கரை விளக்காக விளங்கி வாழ்வாங்கு வாழ்வு வாழ குருபிரான் ஆசீர்பாதம் வழங்கி, ஓதுமதி வேதகலையாம் அன்னைத்தமிழ் இன்னதென அறிந்த ஞானத்தமிழ் மக்கள் யாவரும் சீர் சிறப்புடன் வாழ பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கியதும், ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 08-02-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **தனித்தனற் றலைமைப் பெரும்பதி யரசைத் தரும்புனற் றுறைசிங்ஙா சனரே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
திருவடியாகிய நற்றாளை அ றிய வைப்பதுவே உபதேசம். அருளமுதம் மூலமாக ஐம்புலக் கதவையும் ஒன்பது வாசலையும் அடைத்து, ஓர் வாசல் திறப்பிக்கப்பெற்று ஜீவசிம்மாசனத்தில் ஏற்றி வைப்பவரே மெய்குருபிரான்.

**திருமெய்ஞ்ஞானகொரல்: வாக்கியம் எண் 03ன் தொடர்ச்சி:** அறிவு மாணிக்கம் அருளப்பெற்றுள்ள மனிதனுக்கே தெய்வம் வேண்டும். தெளிந்த அறிவுடன் மெய்ஞான பாதையில் எதார்த்த குணத்துடன் வாழ்வதே சிறப்பு. அறியாமையை அறிந்த பின்னரே முடிவற்ற வேதத்தை அறிய முடியும். தூங்காமல் தூங்கி சுகம் பெறும் காலம் என்பது மெய் மகத்துக்கள் அருளும் பிரம்மவித்தைச் செயலாக உள்ளது.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குர்ஆன் - அல்பகரா : வசனம் 28-29** அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையவனுமான அல்லாஹ்வின் அருளால், னரனாய் இருப்பவர்கள்



Copyright © AMNA Trust, Chennai

மெய்க்குருபிரான் மூலம் ஜீவனை அறிந்து மனுவாகிறார்கள். இந்த செயலே மரித்தவர்கள் உயிர்த்தெழும் செயலாக சத்திய வேதமும் கூறுகிறது. இதனை வள்ளலாரும், சாலை ஆண்டவர்களும், குணங்குடி மஸ்தான் சாகிப் அவர்களும் தங்கள் பாடல்களில் அருளியுள்ளார்கள். அனித்திய வாழ்வில் இருந்து நம்மை னித்திய வாழ்வில் ஏற்றி மரணமிலாப் பெருவாழ்வு வாழ வழியருளும் செம்மல்களே மெய்க்குருபிரான்.

**குருபிரான் அருளமுதம் – குருமுறாதி:** ஆசானின் னாதமே ஆன்மப்பிரகாசமாகி வேதம், தெய்வீகம், மெய்ப்பொருள் ஆகியவற்றை விடியச் செய்கிறது. மனம் பிரளாத நிலையே மூச்சு லயமாகி, மும்மலம் தீரக் காரணமாக உள்ளது. எதற்கும் முதல் பொருளான ஆதி மூலமே, ஆதியே துணை, ஊமையெழுத்து, பிரணவம், தலையெழுத்து, விதியெழுத்து என்பதாகும். ஆதி மூலத்தில் சென்று ஒடுங்கும் செயலே அடக்கமாகும். அச்சமில்லா நாடாகவும், தலை எழுத்தாகவும் இருப்பது அவரவரின் ஜீவனே. மெய்ஞ்ஞான ராஜபாட்டையில் சலியாத ஆர்வமும் திட வைராக்கியமும் உள்ள மக்களாய் ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் இருக்கிறார்கள் என்ற குருபிரானின் ஆசீர்பாத உரையுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

> *குருவின் உச்சிஷ்டத்தைப் பிறர் ஒருவருக்கும் கொடுக்கலாகாது. குருவின் ஆணையைச் செய்யாமல் விடலாகாது. உச்சிஷ்டம் முழுவதையும் ஏற்றுக் கொண்டு தேவப்பிரசாதமாகத் தானே புசிக்கவேண்டும்.*
>
> *~ **குரு கீதை***

## 10-02-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **முன்னுரு தங்ஙுர சிக்குல மாமணி என்னித யப்பெருமான்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



ஆதி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே அறிவு வடிவாகி முன்னிலைக் குருவாய் வந்து, குரைசிக்குல மாமணியாகி, குன் எனும் கன்சுலான இறைபொருளை தன்னிலறிந்த குணக்கடலாகி, தன்னை அறியும் தவமுறையில் நம்மையும் நிறுத்தி நம் இருதயம் திறந்து சிவப்பிரகாசத்தை தரிசிக்க வைக்கிறார்கள்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 162 :** மனம் போன போக்கில் வாழும் உலக வாழ்வு, கோழி மேல் சவாரி செய்வது போன்ற அற்ப வாழ்வாகும். அறிவு வழி சென்று வாழும் வாழ்வு எதற்கும் அஞ்சாத வீரம்மிக்க புலி மேல் ஏறி சவாரி செய்யும் ஞானவாழ்வாகும். ஆன்மாவாகிய பசு, வெறி கொண்டு அலையும் மனமான புலி மேல் பாய்ந்து சாய்த்து, அறிவு வடிவான காருண்யப் புலியாக மாற்றியதும் அதன் மேல் சவாரி செய்ய ஏதுவாகி எமன் எல்லையில் வெற்றி காணும் வீரவாழ்க்கை கிட்டுகிறது.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம்: யோவான்: 15:1, 5, 6.** *நான் மெய்யான திராட்சைச் செடி. என் பிதா திராட்சைத் தோட்டக்காரர். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னில் நிலைக்காதவன் அக்கினியில் எரியுண்ட*



Copyright © AMNA Trust, Chennai 

*கொடியைப் போல உலர்ந்து போவான்.* நான் என்பது, இந்த உடல் எனும் பொய்யான எண்ணத்தை விட்டு, மெய் எனும் நித்தியப் பொருளான ஜீவனே நான் என அறியவைத்து மறுபிறப்புத் தந்த பிதாவே குருபிரான். அவர்களின் திருவாக்கில் வைக்கும் நம்பிக்கையால், நாம் மனம் திரும்பி சகல ஐஸ்வர்யங்களையும் நன்மை தரும் கனிகளாகப் பெற்று பரலோக ராஜ்ஜியத்தில் குடியேறி வாழலாம். திருவாக்கில் நிலை பெறாத மனவழி சென்றோர் நரகில் புகுந்து நரக அக்கினியில் உலர்ந்து எரியும் வேதனை அடைவர்.

*ஜீவசகோதரர் சங்கர்:* கர்த்தராகிய நான் என்பதே மெய்யான திராட்சை செடி. கர்த்தரின் ரத்தமான திராட்சை ரசத்தை பானம் பண்ணுவதால் ஞானபோதை உண்டாகிறது. அறிவு தீயவழியில் செல்லும்போதே தேவராஜ்ஜியம் பறிக்கப்படுகிறது. ஒழுங்கின்றி வளரும் பிரணவப் பொருளை கர்த்தராகிய குருபிரான் தங்கள் நாவாஸ்திரம் கொண்டு வாளாயுதத்தால் சீராக்கி தேவராஜ்ஜியத்தில் நம்மைக் குடியேற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான்: அத்தியாயம்:12. யூஸுஃப் நபி:** நபி இப்ராஹிம் அவர்களின் மகன்வழிப் பேரனான இறைஞானம் பெற்ற தீர்க்க தரிசி யூஸுஃப்நபி, தான் கண்ட கனவை தன் தந்தையிடம் கூறுகிறார். தன் தந்தை எச்சரித்தபடி சகோதரர்களின் கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றப் பெற்று, பின்னர் ஒரு எகிப்தியரிடம் அடிமையாகி விதி வசத்தால் சிறை சென்றார். நன்னடத்தை காரணமாக விடுதலையாகி அரசரின் மதிப்பிலுயர்ந்து எகிப்து தேசம் அவர் அதிகாரத்தின் கீழ் வந்தது. வஞ்சக சகோதரர்கள் வறுமையால் யூஸுஃப்பிடம் தஞ்சமுற்றதும், தன் தாய் தந்தையரை அரியணையில் அமரச்செய்து அவர்களிடம் தான் கண்ட கனவு நனவானதின் உட்பொருளைப் பகிர்கிறார். அவர் பெற்ற உன்னத நிலைக்கு ஒழுக்கமே காரணம். **தானேதான் பழுதில்லாத தேகம் வேண்டும் தன்மைதரும் சரிகையதி னொழுக்கம் வேண்டும்** என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ள திருவாக்கின் படி குருபிரான் அருளும் ஒழுக்க நெறியில் நிலைத்து நிற்பது ஒன்றே மெய்ஞானம் பெறுவதற்கான வழி.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருஅருட்பா:** கலைகளின் அந்தமே கலாந்தம். விதையின் அந்தமெனும் முடிவே தளிரின் தோற்றம். தோற்றத்திற்கும் முடிவுக்கும் காரணம் இறைவனே. குருவருளால் 64 கலைகளுக்கும் மேம்பட்ட ஓர் கலையாம் நயனக் கலையை அறிந்திட அதுவே மூன்றாவது கண்ணாக அஃகெனும் பிரம்மமாக உள்ளதை அறியலாம். மனிதனின் சுவாசக் கலை மற்றும் ஐம்புல நுகர்வுகளும் நியதிக்கு உட்பட்டே உள்ளன. அருட்கலையான ஆசான் அருளே நம் அறியாமை எனும் இருளை நீக்கி மெய்யறிவைப் புகட்டுகிறது. சுவாசம் உள்ளே செல்கையில் ஆதியாகவும் வெளி வருகையில் அந்தமாகவும் உள்ளது. கலையை குரானில் ஹயாத்து என்றும், சத்திய வேதத்தில் கேசரி என்றும், தமிழ் வேதத்தில் உஜூது, அஜபா நடை எனவும் அருளப்பெற்றுள்ளது. கலையை அறியாதவர் நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்யும் புலையர் ஆவர். வேதகலைக்கு அதிபதியான சாகாக்கலையை பழக்கி வைக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே, ஜீவகலையை அறிய வைக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** எதார்த்த உள்ளம் கொண்டோரே மெய்ஞானம் பெறுகின்றனர். **எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்** என்ற சிவபுராணப் பாடலின் பொருள் அவரவர் குணங்களால் கணந்தோறும் நிகழும் பிறப்புகளாகும். ஆதியும் அறிவும் ஒன்றே. ஊனக்கண்ணால் காண முடியாத கடவுளை அறிவதற்கு அறிவும், அறிவை அறிவதற்கு அறியாமையையும் அறிய வேண்டும். வேதவழி செல்வதே நீதிவழியான அறிவின்வழி சேர்க்கும். தேவன் அசுரன் இருவருக்கும் தந்தையான காஷ்யபமுனிவரின் துணைவியரில் அதிதி வம்சம் தேவர்களாகவும், திதி வம்சம் அசுரர்களாகவும் இருப்பதின் ரகசியம் ஒரு மெஞ்ஞான குருவின் தயவால்தான் அறிய முடியும்.

**காதலாகிக் கசிந்துகண்ணீர் மல்கி ... (திருஞானசம்பந்தர்)** காதால் ஆனவர்களே காதலர். **நாழியோர் மேனி கடிகையோர் வண்ணமாக** எதார்த்த உள்ளத்தோடு ஜென்மசாபல்ய செயலுக்குள் ஆகிக்கொண்ட மெய்மக்கள் நாம்தான் என்ற குருபிரானின் அருளுரையுடன் பரம்பொருளின் திருவடி போற்றி வணங்கி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**14-02-2024 ~ புதன்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **உபனிடதத் தெளிந்நவொளி மலையின் பாதம்...** என்ற ஆனந்நக் களிப்பு காப்பு பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
அவதார மூர்த்திகள் யாவரும் தன் அனித்திய தூலத்தை விட்டுத்தான் செல்கின்றனர். ஆண்டவர்கள் தங்களின் தூலத் திருமேனியை மறைத்து 48 ஆண்டுகள் கடந்தாலும் அறிவு வடிவாக அனைவரின் உள்ளத்திலும் அவர்கள் வீற்றிருப்பதை, ஓரறிவாய் விளங்கும் அவர்களின் வாய்மையை அறிந்த பண்டிதர்கள் யாவரும் அறிவது சத்தியமே. தேகம் உள்ள போதே அறிவைப் பெற்று தெளிவாக வாழ வேண்டும் என்பதனை ஆண்டவர்கள், அகப்புற சான்றுடன் குரு முறாதியில் அருளியுள்ளார்கள். மூலப்பழம் பண்ணாரமணி உண்டைப் பெட்டகத்தை அவரவரும் ஆசான் அருளால் தனதாக்கி, அவங்ஙள் அற்று னித்திய ஆனந்நத்தில் வாழும் நிலையை உணர்த்துவதே ஆதி மார்க்க னீதி அவையின் செயலாக உள்ளது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி:** இறைவன் படைத்த படைப்பனைத்தும் மனிதனுக்கு அறிவைப் புகட்டவே. சர்வ படைப்பின் ரகசியமும் மனிதனின் முக்குணத்துள் அடங்கி இருப்பதால் தான் இறைவனை அறிய வேண்டியது மனுவின் கட்டாயக் கடமையாக உள்ளது. தன்னை அறிதலே கடவுள் நிலையறிந்து அம்மயமாகுதல் எனும் செயலாக உள்ளது.

**குருமுறாதி:** யோகத்தின் மூலம் ஞானம் பெறும் வழியும், அமானிதத்தின் சிறப்பும் அருள்வதே குருமுறாதி. மக்களின் அறியாமை இருளகற்றி குற்றெழுத்தை நீக்கி உற்ற எழுத்தை ஓதும் உபதேசம் அருள்வதே, தலைவிதி எழுத்தை துடைத்து எழுதும் முரீது என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அவரவரின் அகமியத்துள் நடக்கும் செயலையே **இந்நூலில் செயலில்லாத வாசகமே கிடையாது** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். **இராப்பகல் இல்லாத இடத்தே வெண்ணிலாவே! நானும் வர வேண்டுகிறேன் வெண்ணிலாவே!** என வள்ளலார் அருளியதையே சாலை ஆண்டவர்கள், **சந்திரனும் சூரியனும் இல்லாத இடம் தன்மயமாய் நின்றிலங்கும் தஜல்லியம்** என அருள்கிறார்கள். செத்திடம், பிறந்திடம், இனிச் சாகாதிருப்பிடம் என்பது அவரவரின் அகரமுதலின் இருப்பிடமே. சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பிரகாசப் பொருளான பாதத்தை மெய் வணக்கத்தின் மூலம் அறிந்திட **சின்னஞ்ஞிறு கால்வழியின் பாத வாழ்வைச் சேருதற்குக் குருவினிட மிதனைக் கேளே** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவு நிலையில் நம்மை ஆக்கி வைக்கும் ஆசானின் நாதமே நம் நான்கு தேக ரகசியம் இன்னதென அறிய வைக்கிறது. ஊன்றிய பாதமும், தூக்கிய பாதமும் தவனிலை ரகசியமாகும். மனம் கலக்காத சுத்த நினைவே யாது என்பதாகும். வந்த வேதமாகிய ஆசானின் அருள் மொழியே எக்காலமும் விளங்கும் வில்லோசை. கணங்களின் பதியாகிய குருபிரானே, அஃகனைக் கண்டு அகரத்தில் ஆக்கும் முக்கண்ணன். திருவடியாம் நற்றாளை, சர்வத்தையும் படைத்து காத்திடும் வஸ்து வித்ததனை, குருவருளால் அவரவருள் அறிய வைக்கும் செயலே நிஜமான மெய்க்கல்வி என்ற குருபிரானின் அருளமுதுடனும் சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

*பொய்யும், குருவிற்குப் பிரியமில்லாததும், கர்வமுடையதும், னிமிர் தண்டமானதும், அவரை ஏவுந் நன்மையதுமாகிய வார்த்தைகளை குரு சன்னிதியில் பேசலாகாது. குருவின் எந்த ஆணையையும் விசேஷமாய் மதித்தல்வேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 17-02-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

வள்ளல்பிரான் அருளிய குருதரிசனப் படலம் **நீர் வளம் நிலவளம் நிறைந்த பொற்பது...** என்ற திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* குருதரிசனை என்பது மெய்க்குருவின் தயவால் அகக்கண் கொண்டு குரு வேறு சிவன் வேறில்லை என்பதை உணர்ந்து அறிவு ரூபத்தை தரிசிக்கும் அகமிய செயலாகும். ஆசானின் அருளமுத வர்ஷிப்பாகிய நீர் வளமும், சீடனின் நன்னிலமாகிய நில வளமும் நிறைந்த அழகே சோலை வனமாக காட்சியளிக்கிறது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - 163:** தூலம் தாங்கி வரும் பெரியோர்களின் இரக்கத்தால் சாகாக்கலை பயில்வதன் மூலமே நம் சர்வ பிழைகளும் தெறித்து ஓடி பிறவிப் பிணியானது நீங்குகிறது. அதன்றி மெய்ஞ்ஞானப் பாரவான்களின் சமாதியில் நின்று முட்டி மோதி அழும் பேய்க் கூத்தால் பிறவிப் பிணி மாறவே மாறாது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - மத்தேயு அதிகாரம் : 22** பரலோக ராஜ்ஜியம், கைலாயம், வைகுண்டம், மெகராஜ் யாவும் அவரவரிடத்தும் சுகம் நல்கும் வீடாக, காலன் அணுக முடியாத கங்குல் பகலற்ற இடமாக இருக்கிறது. ஆசான் அருளால் அஷ்டாங்க யோகம் பழகித் தேர்வதன் மூலமே தஜல்லியம் எனும் ஒளி பொருந்திய பரலோக ராஜ்ஜியத்தில் குடியேறி, மரணமிலாப் பெருவாழ்வு வாழ முடியும்.

*ஜீவசகோதரி பானுமதி:* **அல்குரான்: அத்தியாயம் 13 - அர்ரஃது :** பூமி உண்டானது முதல் பெண்ணின் கர்ப்பம் வரை இறைவனின் படைப்பாற்றல் அற்புதத்தை விளக்கும் அத்தியாயம். ஒரே விதமாக நீர் பாயும் திராட்சை தோட்டத்தில் சில கனிகள் சுவை மிகுந்தும், சில சுவை குறைந்தும் இருப்பதன் காரணம் வித்திலுள்ள குறையே. அது போல் ஆசானின் அமுத வர்ஷிப்பாகிய ஜீவத்தண்ணீர் சீடர்களுக்கு பாகுபாடின்றி அளக்கப் பெற்றாலும், அவரவர் சுபாவத்திற்கும், இச்சைக்கும் ஏற்ப ஞானநிலை கிட்டுகிறது.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருஅருட்பா : அருட்பெருஞ்ஜோதி அகவல் : ஞான யோகாந்த நடத் திருவெளியெனும் ஆணியிற் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி** யோகாந்தம் என்பது ஒதக் கூடிய செயல். சித்தாந்தம் என்பது நம்பிக்கை. வாய்மையே வெல்லும் என்பது நம் பாரத நாட்டின் நம்பிக்கை. பிரபஞ்சம் அனைத்திலும் கடவுள் இருக்கிறார் என்பது இந்து மதத்திலும், இயேசுவே கடவுளின் மகன் என்பது கிறிஸ்துவிலும், ஓரிறைக் கொள்கை என்பது இஸ்லாத்திலும், அஹிம்சை என்பது ஜைன மதத்திலும் நம்பிக்கையாக உள்ளது. ஒட்டு மொத்த மதங்களின் சித்தாந்தமான மறலி கை தீண்டாமையே சாலை ஆண்டவர்கள் அருளிய யோகாந்தமெனும் செயலுள்ள மெய்வழி என்பதாகும். அவ் வழியைப் பற்றி நடக்கும் ஆதி மார்க்க நீதி அவையின் செயலாக விளங்குவதே மூலமந்திரம், பாதபூஜை, மகா சங்கல்ப மந்திரம். ஆசானின் ஒரு மொழி கீதை மூலம் நாம் சித்தாந்தமாகிய நம்பிக்கையில் நிலைத்து நின்று யோகாந்தமாகிய செயலில் சாதிக்க வேண்டும் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 18-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

சாலை ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்று வும்மை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* சர்வ மதங்களிலும் உள்ள சர்வ மூல மந்திரங்களும் கூறுகின்ற மெய் மெய்யாவதற்கும் அதனை நிரூபிக்கவும் ஒரு மகான்மியர் வேண்டும். அழியாப் பதி குடியேறிய நாயகமே நற்றாளைக் காட்டி கற்பிக்க வல்லவர்கள். அந்தி-சந்தி இல்லாத இடத்தில் இருக்கும்



Copyright © AMNA Trust, Chennai

ஆசான் தன் திருவுருவை காட்டும் நாளே, குரு நந்தியாக உள்ள திருநாளாக உள்ளது. அண்ணலாக வரும் அவர்களே நமது சீதனப்பொருளை உணர்த்தி பிறவிப்பிணி தீர்க்கிறார்கள். **ஏதும் இலதாய் யாதும் உளதாய் னினைவுட் பதியும் னாத மின் உடலாகத்** திகழும் வரத பராபரனே வேதமுடியாக விளங்குகிறார்கள். நம் அறியாமை அகற்றி அறிவைப் புகட்டும் ஆசானே நமது முத்தாபம் நீக்கி இக்கடம் விட்டு அக்கடத்துள் ஆக்கி வைக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**



அறியாமையால் வரும் பக்தியால் பயனில்லை. பெரியோர்கள் பயத்தை சுட்டிக்காட்டியே பக்தியை வரச்செய்கிறார்கள். நகலைக் காட்டி அசலை அறிய வைக்க பெரியோர்கள் ஏற்படுத்திய நகல் வடிவமே கோவில்களும் சிலைகளும். மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் இரக்கமே இன்று சராசரி மக்களாக இருந்த நம்மை **அசரா** எனும் அசைவற்ற நிலைக்கு ஏற்றி வைத்துள்ளது. ஒரு ஜீவன்முத்தரின் ஜீவசமாதியின் முன் குருவருளால் பிரம்மவித்தையை அறிந்த மக்களுக்கே பலன் கிட்டுமே அன்றி மற்றவர்களுக்கு எவ்வித பலனுமில்லை. ஆக்கமும் அழிவும் அற்ற அறிவின் நிலையை வேதத்தை பழகியே அறிய முடியும். கோடானு கோடி மறை புகழும் திருப்பாதத்தையே மெய்வழி ஆண்டவர்கள் மெய்நிலை போதத்தில் 71 கேள்விகளாக வினவியுள்ளார்கள். சாகாதநிலை எனும் சன்மார்க்கத்தை அருள்பவரே மார்க்கங்களின் நாதராக விளங்குகிறார்கள். ஐம்புல நுகர்வுக்கு காரணமான ஜீவனை காட்டவல்ல பெரியோர்கள் இருக்கும் காலம் வரை இவ்வுலகில் புல் பூண்டுகள் இருக்கும்.

பாவத்தின் உருவாக இருக்கும் நம்மை புண்ணியத்தின் உருவாக மாற்றுகின்ற இரட்சகரே கர்த்தராகிய குருபிரான். புலன் பொறி கடந்து மெய்ப்பொருளை அடைவதற்கான வழியே சாமுன் சாகப்பழகுவது. எதார்த்த உள்ளம் கொண்ட மக்களே தன்னை அறிந்து சிவமாகும் ஜாதிக்கு உரியவர்கள். மெய்உணர்வு பெற்றவர்களே ஜீவனுக்குள் இருக்கும் ஜாதியை அறிய முடியும். நீதி வழுவா நெறிமுறையில் நிற்பவர்களே ஞானத்தை பெறுவதற்கான தகுதி உள்ளவர்கள். ஜாதி குலம் பாராது நம் இதயத்தை கிழித்து அறியாமை இருளை அகற்றும் பரிசுத்த ஆவியே மந்திர மவுனவித்து என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 18-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்ற **குருமணி மாலை** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

**விடிந்நன இன்னாள் போலே ... வீணர்க்கு விடியா னாளே** மேங்குலத்தோர்க்கு மெய்விடிந்தது போல், அறியாமையிலிருந்து அறிவும் இறை நிலையும் விடிகின்றது. அறியாமைக்குள் இருக்கும் அறிவை ஆசான் அருளால் அறியும்போதே தன்னை உணர முடியும்.

*ஜீவசகோதரி கல்பனா:* அனித்திய உடல் கடந்து பேரின்பம் அனுபவிக்கும் வழியை வேத வாயிலாக பெரியோர்கள் அருளியுள்ளார்கள். ஐயறிவு இன்னதென அறிவிக்கும் ஆறாவது அறிவை பெற்ற மனிதன், அதன் சிறப்பறியாது சிற்றின்பத்தில் உழல்கிறான். பிரணவப்



Copyright © AMNA Trust, Chennai 

பொருளான ஜீவனை ஆசான் அருளால் அறியும்போதே மனதை வென்று காலத்தின் ரகசியம் அறிந்து பேரின்ப பெருவாழ்வாகிய நித்திய இன்பத்தை அறிய முடியும். பஞ்சகோச உடல் கடந்து அறிவு வடிவாக மாறும் செயலே சன்மார்க்கம். நித்திரை எனும் சத்துருவை நித்தியனின் அருளால் விலக்கி ஆதியை திட்டவட்டமாக தன்னில் அறிந்து, சிற்றின்ப உணர்ச்சி கடந்து, தூங்காமல் தூங்கி சுகம் பெறும் மெய்யுணர்வே பேரின்பம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* வேத முதலான உயிரே எழுதாத எழுத்தாக, சின்மயப் பொருளாக இருக்கின்றது. கரையாகிய எமபடரை மாற்றி, இறையாகிய சிவநிலைக்கு ஏற்றி வைக்கும் குருபிரானே தர்மராஜன். எண்ணாகிய அகரமும், ஏனை எழுத்தாகிய ஏகாட்சரமும் அறிந்த மனு ஒருவனே உயிர் எனும் பதத்துக்கு உரியவன். அறிவாகிய உயிரை நம்பி வந்த அனித்திய உடல் அழியும் முன்னே மெய் ஆசானைத் தேடி மனு ஈசனாக வேண்டும். ஓசையும், ஒளியுமாக விளங்கும் இறைவனை அறிவதற்கென உண்டான நகல் வடிவங்களே கோவில்கள். ஆதி என்ற ஜோதி மார்க்கத்தில் நீதி வழி சென்று அவ்வெனும் ஓரறிவாகிய இடத்தில் நம்மை சேர்க்க வந்ததுவே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி வளர்மதி - பவானி:* மகாசங்கல்ப மந்நிரத்தின் படி எதார்த்தமும் நன்மனமும் ஆண்டவர்களின் ஆசீர்பாதமும் இன்னதென அறிய வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி சித்ரா மோகன்:* பாவம், புண்ணியம் இன்னதென அறிய வைக்கும் புண்ணிய உருவே ஆசான். சிவனாக வரும் குருவே நம் ஜீவனாக உள்ளது என அறியும் அறிவே அறிவு.

*ஜீவசகோதரி சித்ரா - பவானி:* அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாக விளங்கும் ஆசானின் அன்புக்கு பாத்திரமானால் கடல் அலை போல் அலையும் மனதின் அலைவறுத்து, நிலை நிறுத்தி நின்றதோர் பிரளயத்தின் அதிசயம் காட்டுவார்கள்.

*ஜீவசகோதரி சபிதா:* கால் வழி பிறந்த நரனே ஆசானின் ஆவிடை யோனியில் பிறந்து மூலமந்திரத்தை தன்னுள் பார்த்து வணங்கும் மனிதனாகிறான். தன்னையறியும் ஆறாவது அறிவை அறியவே சர்வ சிருஷ்டிகளையும் மனிதனுக்கென இறைவன் படைத்துள்ளான்.

*ஜீவசகோதரி லட்சுமி:* தலை காக்கும் இரட்சிப்புச்சீரா அகக்கண் கொண்டு காண்பதாகும். நரனை மனுவாக்கி தேவனாக்கும் ஆசானின் அசல் வடிவே கோவில்களில் நகல் வடிவாக உள்ளது.

*ஜீவசகோதரி ஜீவிதா:* நம் கவனத்தை காவியம் ஆக்கி, ஐவிளைவின் அப்பால் உள்ள மெய்வழியில் நம் மனதை மவுனமாக்கி வாழவைத்துக் கொண்டிருக்கும் சாலை ஆண்டவர்களே மௌனகுரு. ஐந்து அவஸ்தையிலும் பேசும் மனதையே, **ஆன னெஞ்ஞமே யிமைப்பொழு தாகிலும் அலைவறுத் திருந்நாயோ** என்கிறது சிவானந்த போதம். செவிச் சுவையாகிய ராகத்தின் மூலமே அமானிதத்தின் மற்ற ஆறு நிலைகளையும் அறிய முடியும். இறைவனின் சாயலான ஆசானின் சப்தாதியமே அமுத நாதமான மவுனமெனும் மாமணியாக உள்ளது. ஆசான் அருளும் ஞானத்தின் வரம்பாகிய மவுன வைப்பே நயனக்கலையின் ரகசியமாகவும் உணர்வெனும் கம்பத்தில் நம்மை ஏற்றும் வித்தில்லா வித்தாகவும் வல் ஊமையாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* தன்பெருவெளியாக விளங்கும் சாலையின் சிறப்பை சாலை ஆண்டவர்கள் திருப்பஞ்ஞணை எழுச்சி பாடலில் பதினொரு நிலைகளாக அருளியுள்ளார்கள். வந்த வேதமாகிய ஆசானே கணித்தற்கரிய பேரறிவு. நம் மனதை நமக்கு அடிமையாக்கி அறிவாக மாற்றும் ஆசானின் அன்பே நம்மை சிவமாக்கும் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவி தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

## 22-02-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **தத்துவம் கடந்த தயானிதிக் கடலே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

மனிதனின் கழுத்திற்கு மேல் 36ம், கழுத்திற்கு கீழ் 60ம் ஆக உள்ள 96 தத்துவங்களை பெரியோர்களின் துணை கொண்டே கடந்து ஆத்ம வீடடைய முடியும். மானிடச்சட்டை தரித்திருக்கும் ஆவிப்பொருளே நாம் என்பதை மனதில் சங்கல்பமும் விகல்பமும் அற்ற ஆசான் அருளால்தான் அறிய முடியும். அவர்களே **நித்தியம் விளங்கும் நித்திலம்** எனும் முத்தை விளைவிக்கும் கடலாக முத்தியை அளக்க வல்ல முருசல்கள் எனும் ஜீவன்முத்தராக விளங்குகிறார்கள்.

**திருமெய்ஞ்ஞான கொரல் : திருவாக்கியம் - 3ன் தொடர்ச்சி:** இறைவன் செய்நன்றியது எட்டாப் பெருங்கடனே. உயிருள்ள போதே சொர்க்கத்தை அனுபவிப்பதற்கு மனிதனின் முகத்தை குறி வைத்து இறைவன் 1008 அண்டங்களைப் படைத்துள்ளான். பூவில் இருக்கும் தேனை மனிதன் அனுபவிக்க, அதனை நுட்பமாக எடுக்கும் தேனீ என்ற ஒரு இனத்தையே படைத்துள்ளான். எமன் நம்மை ஒன்றும் செய்யாமல் இருப்பதற்காக இறைவன் செய்த நன்றியாகிய செய்நன்றிக்கு வையகமும் வானகமும் மாற்றல் அரிது.

**ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் நினைவில் கொள்ள வேண்டிய நெறிமுறைகள்:** குருபிரான் அருளிய மெய்வணக்க நிலைகளில் ஐயமிருப்பின் கால விரயமின்றி குருபிரானிடம் தெளிவுறுதல் மிகுந்த அவசியமாகும். முன்னரே அறிவித்துள்ள படி, துக்க நிகழ்வுக்கு சென்று வந்தவர்கள் தீர்த்தமிட்ட பின்பே குருபிரானைச் சந்தித்தலும், வணக்கத்தின் போது காஷாயம் அணிதலும் மேற்கொள்ள வேண்டும். குருகீதை மற்றும் ஆன்மாவிற்கு அமிர்த வர்ஷிப்பு நூல்களிலுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுதல் மிக்க அவசியமாகும். தெய்வத் திருப் பாடல்களை தினமும் மனனம் செய்து மனம் அலையாமல் பாதுகாக்கும் அறச்செயல் பழகுதல் மிகவும் அவசியம். அவரவரின் சுத்தத்துறை இருதயத்தில் வீற்றிருக்கும் இறைவனை குருவருளால் அறிந்து தொழுது ஒழுக்கமுடன் வாழ வேண்டும். முக்குணங்களால் உண்டாகும் மூவினைகள் தீர ஆசான் அருளிய மெய்வணக்கத்தில் நிலைத்து நின்று சாதித்து பிறவாமை பெறுவதே நோக்கமாகக் கொண்டு உலக வாழ்வில் பற்றற்று வாழ்வதே வாழ்வாங்கு வாழ்வாகும். பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 24-02-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **என்ன காலம் இறைவன் திருவருள்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
மெய்வழி ஆண்டவர்கள் 76 வருட காலம் ஒய்விலாது அரும்பாடுபட்டு மேதினியில் மக்களுக்கு வழங்கிய காலம் கடந்த பொருளான திருச்சிற்றம்பலப் பொருளைக் கைக்கொண்ட மக்களுக்கு, காலன் என்ற பயங்கள் காணாமல் போகும் என ஆசீர்பாதம் அருளியுள்ளார்கள். மாசி பௌர்ணமி தினத்தில் தூலத்திருமேனியை மறைத்துக் கொண்ட அறிவுருவான பரிசுத்த ஆவி தெய்வம் நம்முடன் வாழ்வதை நாம் அறிவு வடிவம் பெறும்போதே அறிய முடியும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 164 :** எதார்த்தமற்ற மனனிலையே, கல், பேய், அரக்கராக உள்ளது. எதார்த்த உள்ளத்துடன் ஆசானே அருட்கதியென சரணாகதி அடைந்தோரின்



Copyright © AMNA Trust, Chennai 

அறியாமைத் திரையை ஆசானின் ஞானாக்கினியானது விலக்கி, கல்மனதை உருக வைத்து, அரக்கி அரக்கர் விலக்கித் துலக்கி மெய் கைபலிதமான அறிவு வடிவம் ஆக்கி வைக்கிறது.

**குருமுறாதி :** குருபிரானே சொல்லக விளக்கான ஜோதியால் நம் உள்ளத்தில் அறிவு விளக்கேற்றி அகம் துலங்கச் செய்து, அவரவரின் நாமத்துக்குரிய பொருளை அறிய வைத்து அறிவுப் பிரகாசத்தில் ஆக்குகிறார்கள். மெய்வழி ஆண்டவர்களின் சீடரான மெய்வழி நாகப்ப செட்டியார் **கடவுள் என்னும் மெய்வழி ரகசியம்** என்ற நூலில் தான் கண்ட உபதேச நிலைகளை வரி வடிவில் புறமுக அடையாளக் குறியீடுகளாக பிரம்மம், புள்ளி, சுழி, முச்சுழி, கோடு, விண்பூச்சக்கரம், பிள்ளையார்சுழி, ஓங்காரம், தலை, பாதங்கள், ஆயுதவெழுத்து, வில்அம்பு, நடராஜ வடிவம், தராசு விட்டம், பூரணம், சிவம் என 16 னிலைகளாகக் கூறி இதனை குருமுகமாய்த் தன்னில் அறிய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

அநாதியான பிரம்மத்திலிருந்து தோன்றி முடிவாகும் நிலையே சிவமாகும். பூரணமான கலைகள் பதினாறின் ரகசியத்தை அருளி ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் நாம் பெறுவதற்கென பெரியோர்கள் எக்காலமும் வந்து கொண்டே இருக்கிறார்கள். கூரான குருவருளைக் கூர்ந்து போற்றி குருபாதம் மறவாது பழகி வரும் மெய்க்கல்வியால் தான் ஜென்மசாபல்யம் பெற முடியும். மனிதனுக்கு மட்டுமே உள்ள தலைவிதி எழுத்தைத் துடைத்து மதியெழுத்தாக மாற்றும் வித்தையே பிரம்மவித்தை. பிரம்ம தத்துவத்தை அறியும் அறிவைப் பெறும் போதே ஒருவன் பிரம்மத்தை அறிந்த பிராமணன் எனும் ஜாதியில் பிறந்த ஜாதிமான் ஆகிறான் என்ற குருபிரானின் அருளுரையுடன் ஆண்டவர்களின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 25-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்ஙம திடத்தி லைம்புலக் கதவை யடைக்கும் பேரறிவெனக் கருளி...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* நமக்குள் இருக்கும் பிரகாசப் பொருளே நம் அத்தனை செயலுக்கும் காரணம். நவ கிரகங்களுக்கும் மேலாக விளங்கும், அண்டராலும் அறிய ஒண்ணாத அப்பிரகாசப் பொருள் அவரவரின் நாமத்திற்குரிய ஒன்றாக இருப்பதை ஆசான் அருளால் தான் அறிய முடியும். காலன் அணுக இயலாத காலாதீதன் இருக்கும் எல்லைக்கு நம்மை ஏற்றி வைக்கும் வல்லபம் குருபிரான் ஒருவருக்கே உண்டு. பஞ்ச பூதங்களும் கடந்த பொறிகள் ஓடாத இடத்தை அறிவதற்கென உள்ளதுவே நமது வயதும் வாழ்நாளும். கால்வழி பிறந்த னரனாகிய நம்மை ஆசான் தங்களின் இரக்கத்தால் மனுவாக்கி, கரத்தால் திரிக்கப்படாத பூணூல் அணிவித்து, அறுசுவை கொண்டு ஒளியும் இடம் அறிய வைத்து, அடி-முடி-னடுவும் கண்டு அடக்கத்தை மடக்கிப் பிடிக்கும் வித்தையைப் பழக்கி, அவ்வான இடத்தில் அமர வைத்து, பிராமணனாக மாற்றுகிறார்கள். சர்வ புவனத்தையும் தன்னுள் சுருட்டி மடக்கி திரட்டி தனதிடத்து அடக்கி வைத்திருக்கும் ஆகாயமே, நிறம், குணமற்ற, நிர்க்குண இறைவனாக உள்ளது. நாம் அதனுடன் இரண்டறக் கலந்து சாயுச்யபதம் பெறச் செய்வதற்கே தீர்க்க தரிசியர்கள் வருகிறார்கள்.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* நம் அறியாமை விலகுவது ஒரு பெரியவர்களின் முன்னிலையில் தான். பொய் உலக வாழ்வை விட்டு மெய்வாழ்வில் நம்மை ஏற்றி வைக்கும் ஆசானின் பேரன்பே நம்மை பேரின்பம் அனுபவிக்க வைக்கும் பெருமுதலாக உள்ளது என்ற பகிர்தலுடனும், பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.


Copyright © AMNA Trust, Chennai

## 29-02-2024 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மன்னுயிரனைத்தும் மற்றுவிண் ணுயிரும்...** எனும் **குருமணி மாலை** ஸ்தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
இருதயத்தை ஆசனமாகக் கொண்டு என் உயிரில் கலந்து இனிக்கும் கடலே எனவும், சர்வ வேத வேதாந்தங்களின் உட்பொருள் ஆதார உயிர் பதிப்பாக விளங்கும் ஜீவன் எனும் முகம்மதுவைக் கொண்டே அதனை அருளிய கர்த்தர்கள் சாட்சி கூறுகின்றனர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி:** சர்வ வேதங்களின் அடிநாதமாகிய மறலி கை தீண்டாமையை மெய் மதமாக ஸ்தாபித்த சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தால் தனது வயது வாழ்நாளை அறியும் அறிவைப் பெற்றவன் மனிதன் ஒருவனே. ஆசான் அருளால் ஆறாவது அறிவை அறிந்து அறிவுப்பிறப்பில் பிறந்தவனே பிராமணன், அந்தணன், துவிஜன்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* 16 ஆண்டுகள் கடந்தாலும், அழியாப்பதியாம் சொர்ணபதியில் குடியேறிய குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் மலை ஒலியானது எந்தெந்த காலத்தும் எவ்விடத்தும் நம் முன் வந்து நிற்கும் ஒளி மலையாக **ஆதிமலை அனாதி மலை அன்பு மலை ... பழமலை கிழமலை பகர்வதன் முழங்கே** என்பதாக உள்ளது.


*மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா*

*ஜீவசகோதரி ஜீவிதா:* குழந்தையான பருவம் கடந்து குமாரர் ஆன பருவத்தில் எங்கள் யாவரையும் மின்ன வைப்பதற்கு குழந்தைசாமி என நாமம் பூண்டு வந்தவரே! பல கோடி தீபத்தை ஏற்றிய ஒரு தீபமாக, தங்களின் திருக்கரம் கொண்டு ஏற்றிய குலதீபத்தின் ஒளியாய் இன்று எங்கள் அனைவரின் தலையிலும் அறிவுச்சுடர் ஏற்றிய புண்ணிய உருவாய் சாலை ரவி அப்பா என்ற திருநாமம் தாங்கி வந்தவரே! வித்தில்லாது விதைத்த வித்தின் கற்பக விருட்சமாக, சர்வ கனிகளும் ஈந்து, அருங்களைப்பு அகற்றும் அசோக மரமே! பூ மாரி பொழியும் புட்ப கெந்தியே! தந்தையாகி அன்னையாகி எடுத்தணைத்த நம் குருவாம் ஈசனே! நின்தாள் பணிந்து போற்றுகிறேன்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **அல்பகரா வசனம் 87 முதல் 90 வரை:** *பனு இஸ்ரவேல் குலத்தில் வந்த மூஸா நபியின் திரு வரலாற்றின் அகமிய ரகசியங்கள்:* தனது கையில் இருந்த ஓர் கைத்தடி கொண்டு போரான் மன்னனை எதிர்கொண்டார் என்பது அலீபு எனும் ஏகாட்சரத்தை மன்னு சல்வா என்ற பரிசுத்த ஆவியின் உணவை காதால் உண்டு அறிவின் மூலமாக எதிர்கொண்ட செயலாகும்.12 நீரூற்று என்பது 12 அட்சரமாக உயிர் எழுத்தாக **லா இலாஹ இல்லல்லாஹ்**வாக இருப்பதைக் கைக் கொண்டு நபுசுகளைக் கடந்து சிபத்தினை அடைந்து எமபடர் கடந்து ஹயாத்து எனும் பரமபத நித்திய வாழ்வில் குடியேற்றி வைக்கும் செயலாகும்.

**குருபிரான் அருளமுதம் – குரு முறாதி:** பாத நிலைகளின் ரகசியம் பொதிந்ததே குரு முறாதி. அழியாத மெய்மையை எக்காலத்திலும் மக்கள் அறிந்திட ஓர் கதை போல் துல்லியமாக வடிவமைத்துள்ள அல்பகரா திருவசனம் போல், ஆதி மான்மியமானது சொன் னயனக் கலை எனும் மூன்றாவது கண் ரகசியத்தை கொண்டே அருளப்பெற்றுள்ளது. **திருவெனும் இமையா நாட்டின் ரகசியமும்**, ஆதி மான்மியத்தின் **அத்திமாபுரம் அண்ணல் பராபர...** பாடலின்



Copyright © AMNA Trust, Chennai

அகமிய ரகசியத்தின் பொருத்தமும் தன்னை அறிந்தவர்களே உணர்வர். சர்வ நாமங்களுக்கும் உரிய திருச்சிற்றம்பலப் பொருளின் சிறப்பையே சர்வ வேதங்களும் அருள்கின்றன. ஆசான் சொல் கேளாதவனே மதியிழந்து விதிவசம் சிக்கி நினைவெனும் ஆகாயம் கலங்கி குல நாசமுற்று சீரழிபவன். அவரவரின் நாமமாக விளங்கும் ஆர்ந்த சூக்குமத்தை ஆசான் அருள் கொண்டு அறியும் போதே கண்ணான நூலான குரு முறாதியின் உள்ளமை ரகசியம் அறிந்து மும்மூலம் கடக்க ஏதுவாகும், என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித்தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**04-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **னம்பிய தன்னுயிர்...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து **ரஞ்சனி** ராகத்தில் பாடல்களும் விருத்தங்களும் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**18-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **தத்துவம் கடந்ந தயானிதி கடலே...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து **ரஞ்சனி** ராகத்தில் பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

**குரு வா ஆழ்க ! குருவே துணை !!**



Copyright © AMNA Trust, Chennai 

# 2024 - பிப்ரவரி மாத னிகழ்வுகள்

**11-02-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

குருபிரான் சாலை இரவி அப்பா ஆதி மார்க்க னீதி அவை அங்கத்தினர்களுடன் கோவளம் தமீம் அன்சாரி அவர்களின் தர்கா விஜயம்.




**26-02-2024 ~ திங்கட்கிழமை**

குருபிரான் சாலை இரவி அப்பா ஆதி மார்க்க னீதி அவை அங்கத்தினர்களுடன் கோவளம் தமீம் அன்சாரி அவர்களின் தர்கா விஜயம்.





Copyright © AMNA Trust, Chennai

**29-02-2024 ~ திண்டிவனம் சரவண நந்தவனத்தில் நிலம் சீர் செய்யும் பணி நடை பெற்றது.**









Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **21-04-2024 / சென்னை** | குருபிரான் சாலை இரவி அப்பா திரு முன்பாக ஜீவதம்பதியர் வெங்கட்ராமன்-பாரதி அவர்களின் புதல்வன் கணேஷ் கிருஷ்ணா மற்றும் அன்னபூரணி இவர்களின் திருமண வைபவம் சென்னை வில்லிவாக்கத்தில் நடைபெற உள்ளது. |
| **29-04-2024 / இராமேஸ்வரம்** | குருபிரான் சாலை இரவி அப்பா அவர்கள், ஆதி மார்க்க னீதி அவை அங்கத்தினர்களுடன் இராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்திற்கு விஜயம் செய்ய உள்ளார்கள். |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 பிப்ரவரி மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன் மக்களின் எண்ணிக்கை – 36**

**அனைவருக்கும் நன்றி.**

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: message2amna@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 32 - Month: March 2024*